# தானியங்கி துணிப்பை வழங்கும் இயந்திரம்: சுற்றுச்சூழல் தின விழாவில் இயக்கி வைப்பு

புதுச்சேரி, ஜூன் 6–

புதுச்சேரி அறிவியல் தொழில்நுட்பம் சுற்றுச் சூழல் மற்றும் மாசு கட்டுப் பாட்டு குழுமம் சார்பில் உலக சுற்றுச்சூழல் தின விழா கம்பன் கலையரங் கில் நேற்று நடந்தது.

அறிவியல் தொழில் நுட்ப துறை செயலர் முத்தம்மா வரவேற்றார். தலைமை செயலர் ராஜிவ் வர்மா, சுற்றுச்சூழலுக்கான வாழ்க்கை முறை என்ற தலைப்பில் நோக்கவுரை யாற்றினார்.

சபாநாயகர் செல்வம், அனிபால் கென்னடி எம்.எல்.ஏ., வாழ்த்துரை வழங்கினர்.

முதல்வர் ரங்கசாமி தலைமை தாங்கி, 'சுற்றுச் சூழலுக்கான வாழ்க்கை முறை' என்ற உறுதிமொழி வாசிக்க விழாவில் பங் கேற்றோர் உறுதிமொழி எடுத்து கொண்டனர்.




புதுச்சேரி கம்பன் கலையரங்கில் அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் துறை சார்பில் நடந்த உலக சுற்றுச்சூழல் தின விழாவில் ஏ.டி.எம்.,மில் பணம் எடுப்பது போல் பத்து ரூபாய் போட்டு மஞ்சள் நிற துணிப்பை எடுக்கும் திட்டத்தை முதல்வர் ரங்கசாமி துவக்கி வைத்தார். அருகில் சபாநாயகர் செல்வம் அனிபால் கென்னடி எம்.எல்.ஏ., தலைமைச் செயலர் ராஜிவ் வர்மா, செயல் உறுப்பினர் ரமேஷ்.

அதைத் தொடர்ந்து, சுற்றுச்சூழல் தகவல் அறிக்கை மற்றும் புதுச் சேரிக்கான பசுமை பட் ஜெட் வெளியிடப்பட்டது. மிஷன் லைப் பிராய்லி கையேடு, ஒரு முறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் இல்லாத பள்ளிகள், கல் லூரிகள் மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு பசுமை விருதுகள் வழங்கப்பட்டது.

உலக சுற்றுச்சூழல் தினத்தையொட்டி பள்ளி கல்லூரி மாணவர்களுக்கு நடத்தப்பட்ட பல்வேறு போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது.

ஒரு வீடு ஒரு மரம் திட்டத்தின் கீழ் மரக் கன்று வழங்கப்பட்டது. புதுச்சேரி மாசு கட்டுப் பாட்டு வாரிய உறுப்பினர் செயலர் ரமேஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சுற்றுச்சூழல் துறை இயக்குநர் யாசம் லட்சுமி நாராயண ரெட்டி நன்றி கூறினார்.

## 5 இடங்களில் நிறுவ ஏற்பாடு

சுற்றுச்சூழல் தின விழாவில், பிளாஸ்டிக் பை பயன்பாட்டை தவிர்க்கும் பொருட்டு, தானி யங்கி துணிப்பை வழங்கும் இயந்திரத்தை முதல் வர் ரங்கசாமி இயக்கி வைத்தார்.

ஏ.டி.எம்., இயந்திரம் போல் அமைக்கப் பட்டுள்ள இதில் ரூ.10 நாணயம், காகித நோட்டு செலுத்தினால், தரமான துணிப்பை வருகிறது. இந்த இயந்திரம் தற்போது பழைய பஸ் நிலைய உழவர் சந்தையில் நிறுவப்பட்டுள்ளது.

மேலும் 5 இடங்களில் துணி பை வழங்கும் தானியங்கி இயந்திரம் நிறுவ ஏற்பாடு நடந்து வருகிறது.

தினமலர் தேதி: 06.06.2023.